Proceedings of the Director of School Education, Chennai-06

R.C.No.041349/M2/S3/2026 dated.20.07.2026

Sub: School Education - Request for Permission to Conduct the "Enathu Thozhan / Thozhi" Essay Writing Activity for Students of Classes VI to VIII – Reg

Ref: Letter from the Centre of Excellence for Persons with Autism Lr.No.125-4/CoE/B1/2025, dated.06.06.2026

---

With reference cited above, it is informed that a request has been received for conducting an Essay writing activity for students of Grades 6 to 8 on the theme "Enathu Thozhan / Thozhi". The details of the competition are enclosed in the annexure. And also the collected essays to be shared by 30th August 2026 to the email ID: myfriendcoe@gmail.com.

Therefore, all Chief Educational Officers issue instructions to Head masters can be given to co-ordinate and to provide appropriate facilities in this regard.

Enclosure: Annexure

Director

To
All Chief Educational Officer,
Chief Educational Office,
All Districts.

Copy to
The Chief Executive Officer,
Centre of Excellence for Persons with Autism,
Chennai-600083
Email:centreofexcellenceforasd@gmail.com

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரின் செயல்முறைகள்
ந.க.எண்.3335/ஆ5/2026 நாள். 28. 07.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பலாகிறது.

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்

Chief Educational Officer,
Vellore-632 009.

# எனது தோழன் / தோழி - வழிகாட்டுதல்கள்

## அறிமுகம்

மாணவர்களுக்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து ஆட்டிசத்திற்கான ஒப்புயர்வு மையம் மாணவர்களுக்கான கட்டுரைத் போட்டியை நடத்த உள்ளது. இதில் கலந்து கொள்ளும் மாணவர்கள், தங்களுடன் பயின்ற/பயிலும் மாற்றுத்திறனாளி நண்பரைப் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டும்.

## போட்டிக்கான விதிமுறைகள்

- 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம்
- கட்டுரை தமிழ் அல்லது ஆங்கில மொழியில் இருக்கலாம்.
- A4 தாளில் அதிகபட்சம் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## கட்டுரைகான குறிப்புக்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் கட்டுரையில் இடம்பெற வேண்டும்.

- எந்த வகுப்பில் அந்த நண்பரை சந்தித்தனர்.
- தனது நண்பரின் சிறப்புத் தேவைகள் குறித்து தனது புரிதல் என்ன.
- தனது நண்பர் வகுப்பில் மற்றவர்களுடன் இணைந்து இருக்க, தான் எவ்வாறு உதவினார்.

**முகப்புப் பக்கம்** (Cover Page)

கட்டுரையின் முதல் பக்கத்தில் பின்வரும் விவரங்கள் கட்டாயமாக இடம்பெற வேண்டும்:

- மாணவரின் பெயர், புகைப்படம்
- வகுப்பு மற்றும் பிரிவு
- EMIS எண்
- மாற்றுத்திறனாளி நண்பரை சந்தித்த வகுப்பு, பள்ளியின் பெயர்
- மாற்றுத்திறனாளி நண்பரை சந்தித்த வகுப்பு ஆசிரியரின் பெயர்
- வகுப்பு ஆசிரியரின் கைபேசி எண்

## சமர்ப்பிக்கும் முறை

- ஒவ்வொரு மாணவரின் கட்டுரையும் தனித்தனி PDF கோப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்
- கோப்பின் பெயர் மாணவர் பெயர்_வகுப்பு_பிரிவு_மொழி.pdf (Priya_8_A_Tamil.pdf, Karthik_10_B_English.pdf).
- ஒவ்வொரு பள்ளியும் ஒரு Google Drive உருவாக்கி, தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகளுக்குத் தனித்தனி கோப்புறைகள் அமைக்க வேண்டும்
- ஒவ்வொரு மாணவரின் PDF கோப்பும் அதற்குரிய மொழிக் கோப்புறையில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- Google Drive இணைப்புடன், ஒரு பள்ளி சார்பாக ஒரு மின்னஞ்சல் மட்டுமே **30 ஆகஸ்ட் 2026-க்குள் myfriendcoe@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

## பள்ளி மின்னஞ்சலுடன் அனுப்ப வேண்டிய விவரங்கள்

- பள்ளியின் பெயர், UDISE / DISE எண், மாவட்டம்
- தொடர்பு ஆசிரியரின் பெயர், கைபேசி எண்
- பள்ளியின் தொலைபேசி எண்
- சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை.

## முக்கிய குறிப்புகள்

- ஒவ்வொரு மாணவரின் கட்டுரையும் தனித்தனி PDF கோப்பாக மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். PDF அல்லாத மற்ற பதிவுகள் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
- ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் ஒரே PDF கோப்பில் இணைக்கப்பட்டிருந்தால், அந்த முழு PDF கோப்பும் நிராகரிக்கப்படும்.
- முழுமையான விவரங்கள் இல்லாத கட்டுரைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
- கட்டுரை எழுதும் மாணவரின் புகைப்படம் கட்டாயம் தேவை. மாற்றுத்திறனாளி நண்பரின் புகைப்படம் கட்டாயமில்லை.
- Google Drive-ல் பதிவேற்றப்படும் கோப்புகளுக்கு "Edit" Access வழங்கப்பட்டிருக்க வேண்டும்.